1979 பிப்ரவரி 13]

திரு. கோ. ரகோத்தமன்: இத்திட்டத்தின் மூலம் இவ்வளவு ஏக்கர் பயன்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுமாதிரி எப்போது எடுத்து நடத்திக்கொடுப்பார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடிய விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

EXPORT OF BRICKS, ETC.

*Q. No. 33 THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to export bricks, tiles and potteries manufactured at Government owned brick factories ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அரசின் பரிசீலனையில் இவ்வித செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது இந்தச் செங்கல் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிற செங்கல் விலை ஆயிரம் செங்கலுக்கு ரூ. 100, ரூ. 150 என்று விலை அதிகரித்திருப்பது அரசுக்கு தெரியுமா? தனிப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிற செங்கல்லானாலும் சரி அல்லது அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடியதானாலும் சரி விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வீடுகள் கட்டக்கூடிய மத்தியதர வர்க்கத்தினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இதை ஒழுங்குப்படுத்தி செங்கலின் விலையைக் கட்டுப்படுத்த அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-50].

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: செங்கலின் விலை அளவுக்கு மீறிப்போய்க் கொண்டிருப்பதால், செங்கல் உற்பத்தி செய்பவர்களைப் போய் அணுகிக் கேட்கும்போது, தங்களுக்கு போதிய அளவு கரி கிடைக்கவில்லை. முறையான வகையில் தங்களுக்கு கரி கிடைப்பதற்கு அரசாங்கம் வழி செய்து கொடுத்தால் விலையைக் குறைக்கலாம், என்று கூறுகிறார்கள். அரசாங்கம் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா? பேரூராட்சிகளில்

செங்கல் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலும், கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு குறைவான விலையில் செங்கற்கள் கிடைப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, செங்கற்களை தயாரிப்பதற்குத் தேவைப்படும் கரியை அதிக விலை கொடுத்து வாங்குவதாக குறிப்பிடுகிறார்கள். விலை மட்டும் முக்கியமில்லை. பற்றாக்குறை தான் முக்கியமாக இருக்கிறது. அதைப் பெற்றுத் தருவதற்கு எந்த எந்த வகையில் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமோ அந்த முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில் செங்கல் 1,500 கற்களுக்கு 450 ரூபாய், 430 ரூபாய் என்று விற்றுக்கொண்டு இருக்கிறது. ஏற்கனவே இங்கு கேள்விகளுக்கு பதில்களை அச்சிடப்பட்டு தரப்பட்டிருக்கின்ற புத்தகத்தில் அரசின் சார்பில் தயாரிக்கப்படும் செங்கலுக்கு 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை விலை இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசினுடைய நிறுவனங்களினுடைய சார்பில் கேட்கப்படுகின்ற ஆர்டர்களுக்கு 100 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை என்ற விலையில் சப்ளை செய்ய அரசு முன் வருமா? அதே நேரத்தில் தனியாரிடத்தில் உள்ள செங்கல்களுக்கு விலையை கட்டுப்படுத்துகின்ற சந்தர்ப்பத்தை இந்த அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; தலைவர் அவர்களே, திருமழிசையிலுள்ள இயந்திர செங்கற் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் செங்கற்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முக்கியமாக வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்றவைகள் வாங்குகின்றன. இது தவிர பொதுமக்களுக்கும் அவர்கள் வழங்குகிறார்கள். நம்முடைய தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்ற செங்கற்களை விற்பனை செய்கின்ற போது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற விலையில் விற்று வருகிறோம். தனிப்பட்டவர்கள் என்னென்ன விலையில் விற்று வருகிறார்கள் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இப்பொழுது தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையும் பரிசீலித்து நியாயமான விலையில் பொது மக்களுக்கு செங்கற்கள் கிடைக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : அரசாங்கத்திற்கு சொந்தமான செங்கற் தொழிற் சாலைகள் எத்தனை இருக்கின்றன? அவை எங்கெங்கு உள்ளன? அவைகள் எல்லாம் லாபத்தில் நடை

பெறுகின்றனவா அல்லது நஷ்டத்தில் நடைபெறுகின்றனவா? மாவட்ட அளவிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டத்தை விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, திருமழிசையில் உள்ள இயந்திர செங்கல் தொழிற்சாலை ஒன்றும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் பொன்னேரி சமீபம் ஸதர்ன் பிரிக்ஸ் வொர்க்ஸ் என்ற செங்கற் தொழிற்சாலை நிறுவனமும் உள்ளது. திருமழிசையிலுள்ள செங்கற் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் கற்கள் தான் உற்பத்தியாகின்றன. ஸதர்ன் பிரிக்ஸ் வொர்க்ஸில் நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் செங்கற்களும், 15 ஆயிரம் ஓடுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாவட்ட அளவில் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இப்போது இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளில் திருமழிசையில் உள்ள தொழிற்சாலை நஷ்டத்தில் தான் இயங்கி வருகிறது. அங்கே நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் உற்பத்தி செய்தால் தான் பிரேக்கிங் ஈவன் பாயின்ட் என்று சொல்வார்களே, அதாவது நட்டத்தைத் தவிர்க்கும் இலக்கை அடைய முடியும். இதை இன்னும் வெற்றிகரமாக இயங்கச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது வெற்றிகரமாக நடைபெற்ற பின்னால் மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டத்தைப் பற்றி ஆலோசனை செய்யலாம். இது தவிர தனிப்பட்ட நபர்கள் யாராவது மற்ற இடங்களில் நடத்துவதற்கு கடன் உதவி கோரினால், அதைப் பெற்று தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டு வளர்ப்பு அபிவிருத்தி கழகம்.

* வினா எண். 34 திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டத்தில் பட்டு வளர்ப்பு அபிவிருத்திக் கழகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அரூர் வட்டத்தில் பட்டு வளர்ப்பு அபிவிருத்திக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. எம். அண்ணாமலை ; தலைவர் அவர்களே, அரூர் ஊத்தங்கரைப் பகுதியில் தரமான பட்டு உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. இதை பயன்படுத்தி அரூர் பகுதியில் பட்டு அபிவிருத்தி கழகம் ஒன்று அமைக்க வேண்டும். மேலும் இதற்